# சைவ போதினி

மேன்மை கொள் சைவ நீதி விளக்குக
உலகமெல்லாம்.

அன்பர்பணி செய்யவே ஆளாக்கி விட்டு
விட்டால் இன்பமே தானே வந்து
எய்தும் பராபரமே.

எழுந்திரு விழித்திரு
பரத்தினைச்சாரப் பசித்திரு

ஓங்குஞ் சைவம்
தாங்கும் எங்களே


பருத்தித்துறைச் சைவப்பிரகாச சபையாரால்
சைவசமயிகள் முன்னேற்றத்தைக் கருதி வெளியிடப்படும் ஓர் மாதப்பத்திரிகை

மலர் 3 விக்கிரமவரு, சித்திரைமீ, கங்ஷ (13-4-40) இதழ் 1


## கடவுள்வணக்கம்.

விருந்தாக வந்தவர் தங்களுக்கன்ன மிகக்கொடுக்கப்[ நீத்தம்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின் னுமத்தைப் போற்றி
அருந்தா முலைபங்க ரென்னுரப் பாதக ரம்புவியில்
இருந்தாவ தேதுகண் டாயிறை வாகச்சி யேகம்பனே.

—பட்டணத்தடிகள்;

## LETTER.

THE EDITOR, THE SAIVA
BODHINI.

Sir,

I feel it is my duty to convey to you the feelings of joy I felt as I read last week a few numbers of your monthly "the Saiva Bodhini" You can very well imagine my joy if you believe me when I say that it is that joy which induces me to write this letter and the Tamil verse annexed hereto. I am exceedingly glad to find that within the short space of two years your Saiva Bodhini has made much progress The second year pablications abound with better material. I wish that the third year publications will prove still better. I take this opportunity to thank the Pt Pedro Saiva Prakasa Sabai for the sincerity with which it performs its many-sided activities.....

## சைவபோதினி வியப்புரை

ஆசிரியப்பா.

சாலக் குறைந்த சந்தாத் தொகையு
முத்தம சேத்து மூயர்ந்த நோக்கமும்
கைவரப் பெற்றுக் கமழு கின்ற
சைவம் போற்றுஞ் சைவ போதினி
வளர்பிறை யொக்க வளர்வது கண்டு
ஆனந்தக் கடலி லாழ வழிழ்ந்தேன்
நலங்கிளர் போதினி நன்றுப் வளரு
மென்றதற் கைய மேது முண்டோ
வளருங் காயைப் பிஞ்சித் தெரியுமென்
சான்றோர் முதுமொழி சாலவும் மெய்யே
போற்றி போற்றி புராதன சைவ
போற்றி போற்றி போதினி போற்றியே!

இங்ஙனம்

தென்புலோலி க. விநாசித்தம்பி

24-3-40 பாலபண்டிதரும், நியாயதுரந்தர மண

[வரும்

# பிரம்மதரிசனம்

(கேனோபநிஷத்தை
யொட்டியெடுத்தெழுதப் பட்டுள்ளது)

## கதை.

முன்னொரு காலத்தில் அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் பரம பொருளாகிய ஈசனிடச்சரணமடைந்தனர். ஈசன் அவர்கள்மீது கருணைகூர்ந்து அசுரர்களை வென்று வானவருக்குவெற்றியையளித்து மறைந்தார். ஆனல் தேவர்களோ தம்முடையபலத்தினலேயே தமக்கு வெற்றி கிடைத்ததாக எண்ணிக் கர்வம்கொண்டனர். அசுரர்களைவென்ற பெருமை தம்முடையதே என்று தற்புகழ்ச்சிகொண்டு கூறித்திரிந்தனர்.

இப்பொய்யான பெருமையையடைந்து கர்வம் மிருந்திருந்த தேவர்களுக்குப் புத்திகற்பிக்க வேண்டுமென்று ஈசன்கருதினர். ஒரு யக்ஷன் உருவத்தையெடுத்துக்கொண்டு, அவர் தேவர்கள் முன்புதோன்றினர். தேவர்கள் அந்த யக்ஷன்யாரென்பதைத்தெரிந்து கொள்ளவில்லை. புதிதாகவந்திருக்கும் புருஷன் எத்தகையவனே என்றெண்ணி அஞ்சினர். அவர்கள் அக்னிதேவரிடம் ஓடி, "அக்கினிதேவ! நமது உலகத்திற்குப் புதிதாகவந்திருக்கும் புருஷன் யாரென்று கண்டுவாரும்!" என்று வேண்டினர்.

ஆச்சரியம் மிகுந்த அக்கினிபகவான் உடனே யக்ஷனிடம் ஓடினர். யக்ஷன் அவரைநோக்கி, "நீர் யார்" என்றுகேட்டார்.

"என்னை உனக்குத்தெரியாதா? நான் தான் புகழ்மிக்க அக்னிதேவன்" என்று விடைகூறினர், அக்கினிதேவனும்.

'ஓ! புகழ்மிக்க உன்னிடம் என்னசக்தி இருக்கிறதோ?" என்றுவினவினர் புதிய புருடர்.

'நான்புவனத்திலுள்ள எந்தப்பொருளையும் எரித்துவிடுவேன்" என்றார் அக்னிதேவன்.

அதைக்கேட்ட யக்ஷன் ஒருதுரும்பைத்தனக்கு முன்புபோட்டுவிட்டு அதை எரிக்குமாறு அக்னியைக்கேட்டுக்கொண்டார்.

அக்னிபகவான் தனது முழுப்பலத்தையும் கொண்டு முயன்றும் அத்துரும்பை எரிக்கமுடியாமல் அவமானமடைந்தார். அவர் தேவர்களிடம் திரும்பிச் சென்று, 'அந்தயக்ஷன் யாரென்பதை நான் அறியக் கூடவில்லை' என்றுகூறினர்.

விண்ணோரின் வியப்பும் அச்சமும் பன்மடங்கு அதிகரித்தன. அவர்கள் வாயு பகவானிடம் சென்று முறையிட்டனர்.

உடனே வாயுதேவன் வெகுவேகமாக யக்ஷனிடம் ஓடிவந்தார்.

'நீயார்' என்றுவினவினர், யக்ஷன்.

'நான்தான் உலகம்போற்றும் வாயுபகவான்,' என்று விடைபகர்ந்தார் வாயுதேவனும்.

'உன்னுல்என்ன செய்யக்கூடும்? என்றார்யக்ஷன்.

'புவனத்திலுள்ள எந்தப்பொருளையும் நான் சுலபமாக எடுத்துக்கொண்டுபோய்விடுவேன், என்றார்வாயுதேவன்.

"அவ்விதமானல் இந்தத்துரும்பை அப்புறப்படுத்து, பார்க்கலாம்" என்றார்யக்ஷன்.

தன்முழுப்பலத்தைக்கொண்டு முயன்றும் வாயுதேவனல் துரும்பை அசைக்கவும் முடியவில்லை. அவரும் அவமானமுற்றுத்திரும்பியோடினர்.

தேவர்கள் உடனே இந்திரனிடம்"ஓ மன்னவ! புதிதாகவந்திருக்கும் புருடனையாரென்று அறிந்துவாருங்கள்" என்று வேண்டினர்.

இந்திரன் யக்ஷனிடம் ஓடிவந்தார். அதேசமயத்தில் யக்ஷன் திடீரென்று மறைந்துவிட்டார்.

இந்திரன் பிரமித்துப்போய்நின்றார். அப்பொழுது வானத்தில் உமாதேவிதோன்றினள். இந்திரன் அவ்வம்மையை நோக்கி; "தாயே! இந்த புருடர்யார்?" என்றுகேட்டார்.

"அந்தயக்ஷன் பரம்பொருளான ஈசன். பரப்பிரம்மம். பரம்பொருளுடைய உதவியினலன்றே நீங்கள் வெற்றியடைந்தீர்கள்! அவருடைய வெற்றியே உங்களுக்குச் சோபையையளித்தது, என்று கூறினள் உமா.

கண்ணிமை கொட்டும்நேரத்தில் மின்னற்கொடி போலத்தோன்றி மறைந்த யக்ஷனே பரம்பொருள் என்றுதேவர்கள் உணர்ந்தனர். அக்னியும், வாயுவும் இந்திரனும் பரம்பொருளை அண்டியதால், அம்மூவரையும் அனைவரும் போற்றினர்.

## தத்துவக் கருத்து.

இந்தச்சிறுகதையில் ஓர் ஆழ்ந்த கருத்து அடங்கியுள்ளது. நம்முடைய மனமும் இந்திரியங்களுமே தேவர்கள். நம்மை வாட்டுகின்ற ஆசைகளே அசுரர்கள். நம்முள் மனத்திற்கும் ஆசைகளுக்கும் நடக்கின்றபோரே, தேவாசுர யுத்தமாகும். பெரும்பாலும் அசுரர்களான ஆசைகளே மனத்தை வெல்லுகின்றன. ஆனல் நாளடைவில்பரம்பொருளுடைய கிருபையினல் நமது மனம் ஆசைகளை வென்று, அமைதியடைகிறது.

11ம் பக்கம் பார்க்க.

# சுவாமி விவேகானந்தரினது சீவிய சரித்திரம்

பிரதானமாகச் சுவாமி கேதாரேஸ்வரானந்தர் எழுதிய சரித்திரத்தையும் பலபேராசிரியர்களின் குறிப்புரைகளையும் ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது

(திரு. வ. கணபதிப்பிள்ளை அவர்கள்.)

முற்றொடர்ச்சி.

## இந்தியாவின் தரித்திரக்கொடுமை.

திரு. வ. கணபதிப்பிள்ளை

சுவாமி பல தரிசனங்களைக் கண்டபின் இனி ஆழ்ந்த சமாதியில் நிலைபெறவேண்டுமென்னும் எண்ணம் அவருள்ளத்தில் உண்டாயிற்று. ஆனால் இந்தியாவின் தரித்திரக் கொடுமை அவரின் மனதைவாட்டியது.

இந்தியாவின் சகல பாகங்களையும் தனியே பார்க்கவிரும்பிச் தனிமையாகவே சென்றார் சகோதர சந்நியாசிகளின் துணையைமறுத்து எவ்வெவ்விடங்களுக்கு சுவாமிசென்றாரோ அங்கங்கு படித்தவர்களும் படியாதவர்களும் பணக்காரரும் வறியவர்களும் சுவாமியின் அமுதமொழியைக்கேட்கத்திரள்திரளாக வந்துகூடினார்கள். சுவாமியோடுவாதித்து தமது ஐயங்களைத்தெளிவாக்கிக்கொள்வார்கள். ஒருநாள் ஒருமனிதன்' சுவாமியைப்பார்த்து "சந்நியாசியாகிய நீங்கள், ஏன் இவ்வாறு தனவந்தர்களோடு ஊடாடவேண்டும். சந்நியாசிகளுக்கு இதுபொருந்தாது மேலும்ராஜதரிசனம் சந்நியாசிகளுக்குக்கூடாது எனக்கடினமான விதிகள் இருக்கின்றனவே" என்றான். "ஒரு ராஜாவிற்கு மதசம்பந்தமான தர்மசாஸ்திரபோதனைகளை, எடுத்துக்கூறி அவரை நிலைபெறச்செய்தால், ஆயிரக்கணக்கான அவருடைய பிரஜைகளும் தர்மவழியில் ஈடுபடுவர். அரசன் எவ்வழியோ அவ்வழியேகுடிகளும், ஒருபண்டிதரிடத்தில் உயர்ந்த எண்ணங்களை, உதிக்கப்பண்ணினால் அதனால் ஆயிரக்கணக்கான சனங்களுக்கு நல்ல எண்ணங்கள்பரவும்" எனச்சுவாமிபதிலழித்தார்.

## மேனாட்டு நாகரிகத்தில் மயங்கியமகாராசாமாறுதல் அடைந்தார்.

"ராஜபுத்தானா நாட்டிலேயிருந்த ஆள்வார் மகாராசா மேல்நாட்டு நாகரிகத்தில் ஈடுபட்டிருந்தார். ராசாவின்மந்திரிசுவாமியினுடைய அபார ஆத்மீக சக்தியைப்பார்த்து இம்மகானுடைய கிருபையினால் ராசா மாறுதல் அடையலாமென்றுகருதிச் சுவாமியை ராசாவின்சமுகத்திற்கு அழைத்துக்கொண்டுபோனார். சுவாமியைராசா பார்த்தவுடனே "தாங்கள் மிகவும் படித்திருக்கின்றீர்கள், அதுவுமன்றித் தங்களிடத்தில வீரியம்பலம் முதலியவைதிகழ்கின்றன, ஏன் நீங்கள்துறவறம்பூண்டு சந்நியாசியாகிச் சுற்றித்திரியவேண்டும், நல்ல உத்தியோகம் செய்யலாமே," என்றுகேட்டார். உடனே சுவாமி ராசாவைப் பார்த்து இந்தராட்சியத்திற்குத் தாங்கள் ராசாவாயிற்றே; ஆதலினாலே தங்களுடையகடமை குடிசனங்களின் நன்மையைக் குறித்திருக்கவேண்டுமல்லவா, அவ்வாறிருக்க நீங்கள் உங்கள்கடமையைச் சரிவரச்செய்யாமல் ஏன் ஐரோப்பியர்களுடன் சேர்ந்து வேட்டையாடுகிறதும் விளையாடுகிறதுமாக இருக்கின்றீர்கள்' என்று கேட்டார். இதற்கு ராசா கொஞ்சங்கூடச் சினங்கொள்ளாமல், ஆச்சரியப்பட்டு 'எனக்கு அதில் பிரியம், ஆதலினாலேதான் நான்அப்படிச்செய்கின்றேன் என்றார். "எனக்கும்துறவறம்பூண்டு சந்நியாசியாகித்திரிவது பிரியம், ஆதலினாலேநானும் அப்படிச்செய்கிறேன்," என்றார் சுவாமி.

## விக்கிரக ஆராதனை எதற்கு?

விக்கிரக ஆராதனையிலே தமக்குக்கொஞ்சங்கூட நம்பிக்கையில்லை என்று ராசாசொன்னார். கல்லினாலோ மரத்தினாலோ அல்லது மண்ணினாலோ செய்த விக்கிரகங்களிலே தமக்குப்பக்தி உண்டாகவில்லையென்று ராசா தெரிவிக்க, 'மரத்தினால்செய்த விக்கிரகங்களில் தங்களுக்கு நம்பிக்கைஇல்லாவிட்டால் அதைப்பற்றி ஒருபாதகமுமில்லை; பகவானிடத்தில் மாத்திரம் நம்பிக்கை இருந்தால் போதுமானது "என்றுசுவாமிரெசன்னார். சுவரில் மகாராசாவின் படம்ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அப்படத்தைஎடுத்துத் தமதுகைபிற்கொடுக்கும்படி ஒருவனைக்கேட்டார் அவ்வாறே எடுத்துக்கொடுக்க, அப்படத்தைச்

# "பண்டிதர் போற்றும் கம்பரே இந்தக்கம்பர்?"

'பானு'

"நீறணிந்தகடவுணிறத்தவா
ணிறணிந்து சென்றர்கலி மேய்ந்தகிற்
சேறணிந்த முலைத்திரு மங்கைதன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டதே."

திருநீற்றை அணிந்துள்ள கடவுளாகிய சிவ பெருமானது நிறம்போலும் நிறத்தையுடைய மேகமானது செல்லும் வானவழியை அலங்கரித்

---

சுவாமி தமதுகையில் வாங்கிக்கொண்டு, மந்திரியைநோக்கி அப்படத்தில் எச்சில்துப்பும்படி சுவாமிசொன்னர். சுவாமியின்கருத்தை அறிந்து கொள்ளச் சிறிதுமுடியாது மந்திரிதிகைத்துப் போய் அசைவற்றிருந்தார். ஆனல் சுவாமி அவ்விதம்செய்யும்படி மந்திரியை அடுத்தடுத்துக்கேட்டார். அவரைமாத்திரமல்ல, அங்கிருந்தமற்றவர்களையும் அப்படத்தின்மேலே துப்பும்படி கேட்டார். யார்தான்முன்வந்து அக்காரியத்தைத் துணிந்து செய்வார்கள்! உடனே புன்சிரிப்போடு சுவாமி ராசாவைப்பார்த்துக்கூறினர்: வாரீர் ஓ மகாராசாவே! கண்ணாடி, கடிதாசி, சாயம், இவற்றைத்தவிர வேறுஒன்றும் இல்லாத உபயோகமற்ற இத்தப்படத்திற்கு எவ்வளவு பெருமைஇருக்கிறது பார்த்தீரா? உமது உருவம் அமைந்திருக்கிறபடியால் இவ்வளவு கௌரவம் இதற்கு உண்டாயிற்று. அப்படியே ஒருவன் தனது மனைவியினால் ஒரு விக்கிரகத்தைப் பக்தியோடும் விசுவாசத்தோடும் வழிபடுவானுற், பின்னர் அதன்மேல் அவனுக்கு எவ்வளவு கம்பிக்கையும் விசுவாசமும் இருக்கும் என ஆலோசித்துப்பாரும்" என்று சுவாமி விடைபகர்ந்தார் தன்னுடைய சீவியத்தில் இவ்வித அருமையானமொழியை ஒருபோதும்கேட்டதில்லை. என்று மகாராசாகூறி நெடுங்காலமாகக்கொண்டிருந்த பிழையானஎண்ணத்தைவிட்டு, மேனாட்டு நாகரிகத்திலிருந்து விடுபட்டு குடிகளுடைய நன்மையைக்கருதுவாராயினர். கேதரி மகாராசா சுவாமிக்குச் சிஷ்யர் ஆனர். சுவாமியை சிவ அவதாரம் என்றுகருதி ராமநாதபுரத்துராஜா அப்பெரியாரிடத்தில் உபதேசம்பெற்றுக்கொண்டார்.

(தொடரும்)

துப்போய், கடலின்கீரைப்பருகி, அதிர்குழம் பையணிந்த கொங்கைகளையுடைய திருமகளை தனக்கு வேறொருவர்க்கில்லாத சிறப்புஉண்டாகும்படி, மார்பில் அணியாகக் கொண்டுள்ள திருமாலின் திருமேனியைப்போல மீண்டன.

—கம்பர்

"தெய்வநாயகனீறணிமேனிபோற்சென்று [கும்
பௌவமேய்ந்துமைமேனிபோற்பசந்துபல்லுயிர்க்
எவ்வமாற்றுவான்சுரந்திடுமின்னருளென்னக்
கௌவைநீர்சுரந்தெழுந்தனகோகுரன்மேகம்"

ஒலிக்கின்ற ஆரவாரத்தையுடைய மேகங்கள் தெய்வநாயகராகிய சிவபெருமானது திருவெண்ணீற்றினையணிந்த திருமேனிபோல (வெள்ளியனவாய்)ச்சென்று, கடல்நீரைப்பருகி, உமாதேவியாரது திருமேனிபோலப் பசியநிறமடைந்து உலகின்கண்ணுள்ள சராசரங்கட்கெல்லாம் உண்டாகிய சூரியவெப்பத்தைபொழிக்க, முழக்கமுடைய நீர்சுரந்து மேலெழுந்தன.

—பரஞ்சோதிமுனிவர்.

கம்பர்,பரஞ்சோதிமுனிவர் ஆகிய இருவரும் முகில்கள் (மழைபெய்புமுன் மழைபெய்தற்கறிகுறியாகக்) கருநிற பெய்தியமையையே கூறியுள்ளார்கள். அதனைச்சிறிது கவனிப்போம்.

கம்பரின் மேகம்:- விபூதியைத்தரித்துள்ள கடவுளின் நிறத்தையொத்த நிறத்தையுடையது. கடலிற்படிந்து நீரைமுகந்து திருமாலின் திருமேனியைப்போலமீண்டது.

'நீறணிந்தகடவுள்' என்றது சிவபெருமானை.அவரது திருமேனிசெந்நிறமுடையதென்பது பிரசித்தம். "செம்மானத்தொளிபன்ன மேனியன் காண்" என்றும்,"குங்குமத்தின் மேனியவன்நிறமே" என்றும், "தூநீறணியும் சுவண்டர்" என்றும் திருநாவுக்கரசசுவாமிகள் பாடியிருத்தல்காண்க. 'சிவம்' என்றால் 'சிவப்பு'ம் ஆகும். 'சிவம்' என்றசொல் செம்மையடியாகப் பிறந்தது.

பரஞ்சோதிமுனிவரின் மேகங்கள்:- சிவபெருமானது திருவெண்ணீற்றினையணிந்த திருமேனிபோன்றன. கடலின் நீரைப்பருகி, உமாதேவியாரது திருமேனிபோலப் பசியநிறமடைந்து, நீர்சுரந்துமேலெழுந்தன.

பரஞ்சோதி முனிவர் "நீறணிந்தகடவுள் நிறத்தவான்" என்று கூறவில்லை; "தெய்வநாயகன் நீறணிமேனிபோல்மேகம" என்றுகூறினார். சிவபெருமான் "செம்மானத் தொளியன்ன மேனியன்" என்று அவருக்குத்தெரியும்.

கடல்நீரைக்குடிக்கச் சென்றது வெண்மேகம்; அதுநீரற்றது; அதனால், அது உலகிற்குப் பயன்தருமாறில்லை: அப்படியாய வெண்மேகம் வானத்தில் இருப்பின், மழையின்றிமாநிலத்து உயிர்கள் அல்லற்படுவனவே? அஃதேபோல். சக்தி இல்லையேயானால் சிவமும்இல்லை: சிவத்தின் தொழில் உயிர்களுக்குச் சுகத்தைக்கொடுத்தல். அதனை அது சக்தியின் துணையாலேயே புரிகின்றது. சக்தியில்லாத சிவம் சுசிவம் செய்யாது. இந்தச்சித்தாந்தப் பெருங்கருத்தைப் பரஞ்சோதிமுனிவர் அழகாக-தெளிவாக-பொருத்தமாக எடுத்துக்காட்டுகிறார் பாருங்கள். கடலில் நீர்பருகச் சென்றமேகம் தெய்வநாயகன் நீறணிமேனிபோல் வெள்ளிது; அதனால் உலகிற்குப் பயனில்லை: சக்தியில்லாத சிவத்தைப்போல. கடலில் நீர்பருகி "உமைமேனிபோல்பசந்த" மேகம் உலகிற்குப்பயன்றருவது: சக்தியோடுகூடிய சிவத்தைப்போல. முகில்கள் நீர்சுரந்ததை "பல்லுயிர்க்கும் எவ்வமாற்றுவான் சுரந்திடுமின்னருளென்னக் கௌவை நீர்சுரந்து" என்கிறார். இப்படி, கபரும்மருந்தை உண்ணார்க்குச் சர்க்கரைமுதலாயவற்றுட் பொதிந்துகொடுப்பதுபோலப்பரஞ்சோதி முனிவரும் உவமைகளுட்பெரிய சித்தாந்தக்கருத்துக்களைப்பொதிந்து தருகிறார்

"பம்பிமேகம்பரந்தது பானுவா
னம்பன்மாதுலன்வெம்மையைநண்ணினா
னம்பினாட்டுதுமென்றகன்குன்றின்மே
லிம்பர்வாரியெழுந்ததுபோன்றதே."

மேகம்எழுந்து (இமயகிரியிற்) படிந்ததன்மை இவ்வுலகத்துள்ள கடல் சிவபெருமானது மாமனார் சூரியனால் வெப்பத்தைஅடைந்தார் ஆதலால், அவரைநீராட்டுவோம்என்று கருதி அகன்ற இமயகிரியின்மேலே எழுந்துள்ளதைப் போன்றது. —கம்பர்.

"இடித்துவாய்திறந்தொல்லெனவெல்லொளிமழுங்கத்
தடித்துவாள்புடைவிதிர்த்துநின்றிந்திரசாபம்
பிடித்துநீளம்புகோடைமேற்பெய்துவெம்பெரும்போர்
முடித்துநாமெனவருதல்போன்மொய்த்தனகொண்மு"

மேகங்கள் தமது வாயைத்திறந்து ஒல்லென்றிடித்து, சூரியப்பிரகாசமும் மழுங்கும்படி மின்னலாகிய வாளை நாற்பக்கத்திலுமசைத்து நின்று, இந்திரதனுசைக்கையிற்பிடித்து, நெடிய அம்புகளைக் கோடையாகிய பகைஞன்பேரிற்பொழிந்து, கொடியபெரும்போர் செய்துமுடிப்போமென்றுகருதி வருவதுபோல (ஆகாயத்தில்) நெருங்கின —பரஞ்சோதி முனிவர்.

இவைமாத்திரமல்ல, வருணனைகளிலே பரஞ்சோதிமுனிவர் அரிய உண்மைகள், பெரியார்சரித்திரங்கள், உலகவழக்கங்கள் எல்லாவற்றையும் பெய்துரைப்பர். ஒருஉதாரணம் மாத்திரம். பொதியமலைக்குமேலே முகில்கள் நீர் சொரிகின்ற தன்மையைக்கூறுபவர்,

"முனிதனீள்வரையுச்சிமேல்முழங்கிவானிவந்து
தனிதநீர்மழைபொழிவனதடஞ்சிலையிராமன்
கனிதனீர்மையாலாலவாய்க்கண்ணுதல்முடிமேல்
புனிதநீர்த்திருமஞ்சனமாட்டுவான்போலும்"
என்றுகூறினார்.

"மேகங்கள் ஆகாயத்திலுயர்ந்து முழங்கி அகத்தியமுனிவரது நெடியபொதிய மலையின் முகட்டில் நீர்மழையை வருஷித்தல், நெடிய கோதண்டமேந்திய இராமமூர்த்தி கனிந்ததமது அன்புடன், திருவாலவாயில் வீற்றிருக்கும் நெற்றிக்கண்ணையுடைய சோமசுந்தரக் கடவுளது திருமுடியின்மேல் பரிசுத்தமாகியசலத்தினால் அபிடேகஞ்செய்தலையொக்கும்" என்பதுகருத்து. "இராமமூர்த்தி பிதாவின்கட்டளைப்படி வனசஞ்சாரஞ் செய்கையில், தம்மனைவியாகிய சானகியை இராவணனென்னும் அரக்கன் வௌவி அவனது இலங்கைநகரிற் சிறைவைத்ததனைத் தூதுவராலறிந்து அவனையெதிர்க்கச் செல்கையில் திருவாலவாயில் வீற்றிருந்த சோமசுந்தரப்பெருமானையருச்சித்து அவரது திருவருள் பெற்று இலங்கைமன்னனைச் செயித்து மனைவியைச்சிறைமீட்டு உடன்கொண்டு அயோத்தியடைந்து அரசுசெய்திருந்தனன்." என்னும் பெரியார்சரிதத்தை இங்கே அமைத்துக்காட்டுகிறார்

இங்கே காட்டியவற்றால், பரஞ்சோதி முனிவருக்கும் பண்டிதர்போற்றும் பாவல்லகம்பருக்குமிடையில்- ஏதோ-பெரியதொரு - வித்தியாசம்காணப்படுகின்றது. பண்டிதர்போற்றும்-போற்றிப்புகழும்-கம்பரே இங்கே எடுத்துக்கொண்டஇந்தக்கம்பர்?

சைவபோதினி

விக்கிரமவருஷசித்திரைமீகங்க

## மூன்று.

சைவசமயத்திலும் மற்றுஞ்சமயங்களிலும் மூன்று என்றவெண் பலவிஷயங்களிலும் பாவிக்கப்படுகின்றது. மூத்தோரில் மூவர்மூர்த்திகள், மூக்கண், முப்புரம், மும்மலம், மூன்றுவீதி, மூன்று தாம்பலம்வரல், மூவுலகு, மும்மதம் என்பன மூன்றின்பாவிப்பைக்காட்டும் உதாரணங்களிற் சில. மூன்று என்றவெண் அதிகமானகிரியைகளிலும் கணிப்படும். மூன்று என்றால் ஏதோ தெய்வீகசக்திவாய்ந்ததென்று எங்களில் அனேகருக்கு ஒரு நம்பிக்கையுண்டு.

சைவபோதினிக்கும் இம்மாதம் மூன்றாவது ஆண்டுபிறக்கிறது. சென்ற இரண்டாண்டும் தெய்வகிருபையால் விக்கினமொன்றுமின்றி வளர்ந்த இப்பத்திரிகை இந்த ஆண்டுமாத்திரமன்றி பல்லாண்டுகளாக நிலவி சைவசமயிகளுக்குத் தொண்டாற்றவேண்டுமென்பதே எமதுபிரார்த்தனை. சென்ற இதழில் நாம் கூறியபடி (சந்தாதாரர்களாகச்சேர்ந்து மாதம் 4 அல்லது 6சதம் உதவி) இதை சைவநன்மக்கள் ஆதரிப்பின் அரிய விஷயங்களை இதில் வெளியிடச்சரத்தியப்படும்.

மூன்றாம்ஆண்டில் புதிய ஊக்கத்தைத்தந்து ஆசீர்வதிக்குமாறு முக்கண் முதல்வனை வணங்குகின்றோம். இப்போ காலம் பலவிதத்திலும் கஷ்டமாகவே இருக்கிறது. ஆனாலும் காலனைவென்ற கண்ணுதற்பெருமானின் கடைக்கண்ணோக்கிருக்கையில் சாலவும் நன்மைபெறுவோமென்பது சத்தியம்.

சைவபோதினிச் சந்தாநேயர்கள் யாவருக்கும் வரும் ஆண்டு நல்லாண்டுகுக. உங்கள்யாவருக்கும் பருத்தித்துறைச்சைவப்பிரகாச சபையாரின் புதுவருடசோபனமும் வாழ்த்தும் உரியதாகுக.

சுபம்!

## ஆலயம்.

நிரு. கா. ஆறுமுகம், பருத்தித்துறை.

ஆலயகட்டிடம் தேகசாயலாய்உள்ளது. அதன் வெளிரூபம். தலைதொட்டுக் கால்வரையுமுள்ளரூபத்தைப்போன்றது.

ரூபவஸ்து அரூபவஸ்து ரூபாரூபவஸ்து என மூன்றுநிலைகளும் ஒன்றற்கொன்று சம்பந்தப்பட்டுள்ளன. இவைகளில் ஒன்றுதலை மற்றது கொஞ்சு இன்னொன்று அடியில்வயிற்றின்கிழ் உள்ளது. இந்நிலையங்கள் ஆலயத்துள் மண்டபபாகுபாடுகளாலறியப்படும்.

ஆலயத்துள் ஆறுமண்டபங்கள் தேகத்துள் ஆறுத்ராநிலையங்களைக்குறிக்கும்.

மண்டபங்கள் ஒவ்வொன்றும் ஒன்றிலிருந்துமற்றொன்றுபெரிதாயிருத்தல் தோற்றவிரிவைக்குறிக்கும்.

ஆலயத்துள் மூலவர் உற்சவர் முதலிய பலமூர்த்திகள் அமைக்கப்பட்டுள்ள ஒன்மை தேகத்துள் ஆங்காங்கு சிவசக்திதாக்கமாய்ப் பொருள்படும்இடங்களைக்குறிக்கும். அறிவு மனம் தேகம் என்னும் தன்மைகளையும்குறிக்கும். மூலவருக்குப் பிற்பக்கமாய் உள்ள வெளியும் பிரகாசமும் நிராதாரவஸ்துவாகிய பரவெளியையும் ஞானசூரியனையும் கருதும்.

தூபி கோபுரம் நந்தி பலிபீடம். கோமுகை கொடிஸ்தம்பம் முதலிய ஆலயகுறிகள் சிவசக்திஜீவ்வோர்நிலையாய் இயங்கும் ஸ்தான அடையாளங்களாம். ஓமஸ்தானம் பூசைத்தானம் தியானத்தானம் எனப்பிரிவுகள் மண்டபங்களில் உண்டு. ஓமஸ்தானம் இயக்கஉற்பத்தியையும் பூசைத்தானம் இயங்கும் நுபவகையையும் தியானத்தானம் இயக்கத்தின் ஒடுக்கத்தையும்குறிக்கும்.

களஞ்சியம் யாகசாலை வசந்தமண்டபம்முதலிய இடங்கள் தேகத்துள் அச்சீவசக்தி நன்இயக்கத்தில் ஒருநிலையிலிருந்து இன்னோர்நிலையாய் மாறுதலடையத்தரிக்கும் ஸ்தானங்களாம்.

ஆலயத்தைச்சுற்றி இருக்கும் வீதிகள் அறிவு மனம் தேகம் என்னும் ஸ்தூல சூக்கும காரணநிலைகளாம். ஆலயத்துள் நடத்தப்படும் ஒவ்வோர்கிருத்தியங்களும் தேகத்துள் பிராணசக்திவரமுன்னமும் வந்தபின்னும் உள்ளநிலையைக்குறித்துக்காட்டும்.

திருவிழா கொடியேற்றமென்னும் துவசாரோகணம் முதல் கொடியிறக்கமென்னும் அவரோகணம் வரையில்உள்ளபத்தும் தசவாயுவின் இயக்கபேதத்தையும் அதிசயகிருத்தியங்களையும்குறிக்கும்.

பிரணவம் முதலியமந்திரங்களும் வேதசோரூபமான பாராயணங்களும் நாகசுரம்முதலிய தசகிதநாதங்களும் பஞ்சபுலன்களாகிய வெளிச்சக்திகளிலொன்

ரூப செவிப்புலஉணர்ச்சியாம். மூலாக்கினியைக்குறிக்கும் தூபமும் ஞானக்கினியைக்குறிக்கும் தீபமும் பஞ்சபூதத்தைக்குறிக்கும் பஞ்சாலாத்தியும் எழுவகைப்பிறவியைக்குறிக்கும். ஏழுடுக்குத்தீடமும் மூலத்துட்சொலிக்கும் ஒளியைக்கருதும் கும்பவிளக்கினமும் ஆகிய சோதியுள்ள பலவிளக்குகள் கடவுளிலைடையும் ரூபஉணர்ச்சியாம்.

நைவேத்தியம்முதலிய உணவுப்பொருள்கள் நாக்கினுலுள்ள இரசஉணர்ச்சியாம்; அங்குசெறிந்து கமழும் கறுமணம் முதலியவாசனைகள் மூக்கினுலுணரப்படும் கந்தஉணர்ச்சியாம். இவ்வகை உணர்ச்சி ஒருங்குசேர்ந்து மனத்தாலடையும் பரிசஉணர்ச்சியாம்.

அறிவுக்குதோர்முகமாக அந்தக்கரணமென்னும் மனம் புத்திசித்தம் அகங்காரம் ஆகிய உட்சக்திகள் தாக்கத்தை அளிக்கும்.

இவ்விருசக்திகளையும் இணைப்பது மனமேயாம். இம்மனம் வெளிச்சக்தியின் அந்தமாயும் உட்சக்திகளின் தொடக்கமாகவும் நிற்கும்.

இவ்வகையே வெளிச்சக்திகளாலே முதல்விஷயம் உணரப்பட்டு பின் உட்சக்திகள்மூலமாய் அறிவுக்கு உணர்த்தப்படும்.

பரிபாஷையால் அறிவுவிர்த்திகள் விளக்கும் அறிகுறிகள்பல்வுண்டு. உருத்திரகணிகையர் என்னும் நடனமாதர்கள் விதிப்பிரகாரம்செய்யும் நடனகாட்சிகளும் மூலாதாரத்தில் நின்றுதிக்கும் பிராணவாயுமேலெழும்பி அங்கிங்குசெல்லும் பாவனையை அர்த்தப்படுத்தியுள்ள வாணவினையாட்டாகிய அதிசயகாட்சிகளும் இம்மனதை அடிமையாக்கி ஓரேநிலையில்நிற்க உதவும்.

இவ்வகைக் கியானமுறைகள் ஆலயத்துள்வணக்கமுறைக்காகப் பண்டுதொட்டு வழக்கத்திலுள்ளனவாம்.

சிந்தையிற்கியானம் கூடக் கூடத் தந்திரமாய்வாய்வு உறுதிப்படும். வெளிச்சக்திகள் உணர்ச்சிகளுறைபக்குறைய உட்சக்திகளின் உணர்ச்சிகள் கூடிக்கூடிவரும். உட்சக்திகளின் பெல்ப்பதை அறிவு பூரணப்படும்.

காலத்தால் ஏறும் இயற்கை அறிவை ஆலயம் முதலியசெயற்கைவழியால் அனுடித்து அறிவைத்தீவிரமாகப்பூரணப்படுத்துவதுஓர் உண்மையானவழியாம்.

ஒன்றைவிளக்குவதற்குமுதல் ஒரு உதாரணங்காட்டி உண்மையை அறிவது ஓர்வழியாம். அவ்வகையே ஆலய உதாரணத்தால் உண்மை அறிவை விளக்குவது சுலபமானமுறையென ஆண்டுவரப்படுகிறது.

மூலாதாரமூர்த்தியாகிய விக்கினேஸ்வரர் முதலிய முகூர்த்தஸ்தாபனங்கள் சீவசத்தியின் பிரதான இயக்கங்களைக்குறிக்கும் தத்துவங்களாம். இந்த தத்துவரூபங்களே இயற்றும் பிராணவாயுவின்சாயல்களே வாகனரூபங்களாம்.

தலமத்தியத்தில்உள்ள இருகுறிப்புகளின் உபசாரங்கள் சத்தியம் பொறை சாந்தம் முதலியவைகளாம். தலநீங்கிய தேகமத்தியத்திலுள்ள இரத்தாசயம் தசை சுவ்வு முதலியவைகள் சூடை கொடி ஆலவட்டம்முதலிய உபசாரங்களைளப்படும்.

ஒவ்வொரு மூர்த்திகளுக்கும் சாமரைமுதலிய பதினறு உபசாரங்கள் பூசைக்கிரமத்தில் உண்டு.

இவ்வுபசாரங்கள் அறிவுக்குமனம் செய்யும் பதினறுபாகுபாடுகளாம். இப்பதினறுபாகுபாடுகளுக்குக் காரணம் மனமாகிய சாதிரன் தேகமாகியபூமியைச் சுற்றும்பொழுது திதிவகையாற்குறிக்கப்படும் பதினறுசலனபேதங்களாம்.

பரதகாட்டியம் நாடகம் சாதன முறைகள் வணக்கமுறைக்குவழிகளாய் அக்காலம் தொட்டு உண்டு.

தேகசொரூபத்தையும் தேகத்துள் அடங்கியுள்ளசகல இயக்கசொரூபங்களையும்முன் அனுபவஞானத்தாலறிந்து அவ்வடைவேயுள்ளதாய் ஆலயம்எற்படுத்தி வணக்கமுறை பண்டுதொட்டு ஆண்டுவரப்பட்டது.

ஆலயதொண்டு செய்வோர் பலபாகுபாடாய்த்தொழில் செய்வர். தேகதத்துவத்தில் தொண்டுசெய்யும் மனமானதும் பலஇனமாய் பல தொழில்செய்யும் இம்மனம் சாதனவழியாய்அறிவைவிர்த்திக்கச்செய்து மேலினம் கிழினமென பலகிலைப்பட்டு இயங்கும்.

வெளிக்குறியாகிய தீட்சை ஆசாரிஅபிஷேகம் முதலியபரீட்சைகளால் உயர்தரமனமுடையவரென்றும் மற்றும் ஆலயதொண்டுசெய்பவர் கீழ்நிலையுடையவரென்றும் ஆதுபற்றி சுத்தா அசுத்தத்தன்மைகாரணமாக மேலினமனதுடையோர் கோயிலினுள் உள்ள மண்டபப்போக்குவரவுக்கு இன்னுர்தக்கவர் இன்னுர்தகாதவர் என ஏற்பாடு உண்டு.

அறிவுவிர்த்தி அதிகம் அடைந்தோர் மனுதத்துவம் அவ்வறிவிற்கு அதிசமீபத்தில் உள்ளதென்றும் அறிவுவிர்த்திசெய்யாதோர் மனுதத்துவம் அறிவுக்குத்தூரப்பட்டு இயங்குமென்றும் நியதியுண்டு. இவ்வகை அதிநுண்ணிய விதிகளெல்லாம் ஆகமமென்னும்நூல்களால் அறியலாம்.

8ம் பக்கம் பார்க்க

## கடவுள் வணக்கம்.

திரு. சே. வேல்முருகு அவர்கள்.

முன்னேது செய்தாலு முன்னைத் தொடர்ந்திட்டாற்
பின்னேதுந் துன்பம் வருமோ---பிறைசூடி
நின்பாலன் பாலுள் ளுருகுமெனக் கெஞ்ஞான்று
மின்பசுகந் தந்திடு வாய். (1)

மண்விண்ணு மெங்குமுள்ள தோர்பொருளாய்ப் பல்
பண்டுமின்று மென்று மொருபடித்தாய் [வேறாய்ப்
கண்டுங் களித்திடுவாய் நெஞ்சமேபேரின்ப[நின்றானைக்
முண்டு துயர்தீர்ந் திடும். (2)

அவ்வென்று வாசியை விட்டுப்பின் னுள்நோக்கி
உவ்வென் றிழுத்தூஉம் ஓமென்று--நெஞ்சமே
ஈங்குல் பகவில்லா மத்தியிலே தானின்றால்
பங்கமி லின்பசுகங் காண். (3)

அவ்வென் றொலித்தே யனைத்து முதித்தன
உவ்வென் றொலித்தே யனைத்தும் நிலைத்தன
உம்மென் றொலித்தே யனைத்து மொடுங்கின
இம்மண்விண் ணெங்குமுள்ள தோம். (4)

நானென்றும் நீயென்றும் நாடியே ஊனெடுத்தேன்.
நானென்றும் நீயென்றும் வேறுளதோ-வான்பொரு
ஈங்குமங்கு மெங்குமாய் நிற்குமுன்னைக் கூடியினி [ளே
யோங்காரத் துள்ளிருப்பேனான். (5)

---

## திரிகடுகம்

தும்பளை, பாலபண்டிதர் திரு. V. சுப்பிரமணியம் அவர்கள். (முற்றொடர்ச்சி)

ஒத்தபொருள்கள் மூன்று.

நிறைநெஞ்சுடையானைநல்தாவஞ்சும்
அறளைநினைப்பானைஅல்பொருளஞ்சும்
மறவனையெவ்வுயிருமஞ்சும்-இம்மூன்றும்
திறவதிற்றீர்ந்தபொருள். (72)

புலன்கள்மேற்போகாது நிறுத்தப்படும் நெஞ்சினையுடையவனுக்கு வறுமை அஞ்சும்; தருமத்தையே சிந்திக்கின்றவனுக்குப்பாவம் அஞ்சும். கொலைத்தொழில் செய்வோனுக்கு எல்லாவுயிரும் அஞ்சும். ஆதலால், இம்மூன்றச்சமும் வேறுபாட்டினீங்கி ஒத்தபொருள்களாம்.

மனத்தை புலன்களிற்செல்லவிடாது அடக்கி ஆள்பவன் தான்எண்ணிய பொருட்களை அடையக்கூடுமாதலின், அவனுக்கு வறுமையில்லையாயிற்று. தருமத்தையே சிந்திக்கின்றவன் பாவஞ் செய்யமாட்டானாதலின், பாவம் அவனைஅஞ்சும். கொலைத்தொழில் செய்பவனுக்கு எல்லாவுயிர்களும்பயப்படும்.

தீங்குபயக்கும் சீவியஞ்செய்வோர்மூவர்.

இரந்துகொண்டொண்பொருள்செய்வல்என்பானும்
பரந்தொழுகும்பெண்பாலைப்பாசமென்பானும்
விரிகடலூடுசெல்வானும்இம்மூவர்
அரியதுணிந்துவாழ்வார். (73)

பிறரை இரந்து அவரிடும்பிச்சையை வாங்கி ஒள்ளியசெல்வப் பொருளைச் சம்பாதிப்பேனென்று சொல்லுகின்றவனும், பலரிடத்தும்வியாபித்துச் செல்லுகின்ற வேசையைத்தன்மேல் அன்புடையளென்கிறவனும், விரிந்த கடலிடத்துப் பொருள் சம்பாதித்தற்குப்போகின்றவனும், ஆகியஇம்மூவரும், தமக்குமுடியாத காரியங்களைச் செய்யத்துணிந்து வாழ்கின்றவராவார்.

ஓரறத்தையும் முடிக்கும்
துணிவில்லாதவர் மூவர்.

கொலைநின்றுதின்றொழுகுவானும்பெரியவர்
புல்லுங்காற்றன்புல்லும்பேதையும்-- இல்லெனக்கொன்
றீகென்பவனைநகுவானுமிம்மூவர்
யாதுங்கடைப்பிடியாதார்.

கொலைசெய்வதன் கண்ணேநின்று ஒருயிரை வதைத்து அதனிறைச்சியைத்தின்பவனும், தன்னிற்பெரியார் தன்னைத்தழுவும்போது, தானும் எதிரேதழுவுகின்ற அறிவில்லாதவனும்; எனக்கு ஒருபொருளில்லை நீகொடு என்றுயாசிக்கின்றவனைப்பரிகாசஞ்செய்பவனும் ஆகிய இம்மூவரும் யாதோரறத்தையும் கடைப்பிடிக்கமாட்டாதவராவர்.

---

## ஆலயம்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கஸ்தலத்தில் ஆகமபிரமாணங்கள் வணக்கமுறைக்கட்டளைச்சட்டங்களாம். இக்காலத்து அரசாங்கமுறைக்கு அனேக கட்டளைச்சட்டங்கள் உண்டு.

போகபோட்சியம் உடை நடை பாவனை முதலியவைகளில் காலத்துக்குக்காலம் பேதங்கள் உண்டுபடுவதுபோல ஆலயவணக்கமுறையிலும் பேதங்கள் உண்டுபடுவது வழக்கமாம்.

கற்கை கேட்கை கோயிற்பழக்கம் அனுசரிப்பு முறையில் பேதப்பட்டிருப்பினும், அவைகள் எல்லாராலும் அங்கீகரிக்கப்படவேண்டியது அவசியம்.

(தொடரும்.)

# யார் பெரியர்?

'விராணி'

மானிட உருவெடுத்துவாழும் ஆண்மகோடிகளாய எங்களிடையே யார்பெரியர்? பலரும் பற்பலவிதத்தில் பெருமை அடைகின்றனர்.கலையிலாக்கல்விகற்றவரே உலகிற்பெரியர் என்பது சிலர் கொள்கை. அளவிலாப்பணம்படைத்தவரே உலகிற்பெரியர் என்பது மற்றொருசிலர் எண்ணம். நிகரிலா அழகுடையரே பெரியர்என்பது வேறுசிலர்நினைவு ஆண்மைபடைத்த யுத்தவீரனே இவ்வுலகிற்பெரியன்என்பது இன்னுஞ்சிலர் கொள்கை இவ்விதமாக, ஒவ்வொருவரும், தம் தம் மனப்போக்குக்குத்தக்கவிதமாய் இருப்பவர்களே பெரியோர் என நினைத்து உண்மையில் எத்தகையர் பெரியர் என்பதை அறியாது மாய்கின்றோம்.

நாம் மானிடப்பிறவி யெடுத்ததன்பயன் கடவுளையடைதலே. இந்நோக்கத்தைஅடிப்படையாகவுள்ள நாம், நீருக்குள் ஆழ்த்தப்பட்டதுவாமுள்ள ஓர் மட்குடத்துக்கு உள்ளும் வெளியும் நீர் இருப்பதுபோல ஞான வெளிக்குள் நவத்துவாரமுள்ள இப்பாண்டத்தைத்தாங்கி ஆழ்ந்திருந்தும் கடவுளையடையமுயலாமல் மிரள மிரள விழிக்கின்றோம் தாம்எண்ணிவந்தகருமமே நினைவாகி என்றும் எப்பொழுதும்தியானத்தில் ஆழ்ந்து, ஆதியும் அந்தமும் இல்லா அருமபெருமசோதியுடனே இரண்டறக்கலக்க வெண்ணி ஊண் உறக்கமின்றி சம்வாழ்வை அப்பரம்பொருளுக்கே, பொன்னும் மின்னு மன்னுதாற்றச் செழுஞ்சுடருக்கே, அர்ப்பணம் செய்தவர் உண்மையில் பெரியரா சிறியரா? அங்கிங்கெனாதபடி எங்கும்பிரகாசியை அடைவ தெப்படி என்ற பேரவாவால் இன்னதுசெய்வது எனஅறியாது சித்தங்கலங்கித்திரியும் சிவனடியார்களை நாம் பேயர்என்றும் பித்தர்என்றும் எண்ணி இகழ்கின்றோமே. இதைவிடச்சிறந்த மடமைக் குணமும் வேறுளதோ?

வேண்டியார்க்கு வேண்டிய வேண்டியவிடத்தீயும் அச்சுடர்விளக்கும், அடியார்க்கு எளியர் தானே. உன்னுவார் உள்ளத்துறையும் அப்பரம்பொருள் கூட அடியார்க்கு ஓடுக்கமானால் வேறு யார்தான் சிவதொண்டரிலும் பெரியராகமுடியும் கல்விஅனுபவம், ஞானஅனுபவம், உலகானுபவம் என்றமூன்றும் ஒருங்கே அமைந்த ஔவைக்கிழவியும் "இறைவரோ தொண்டருள்ளத்தொடுக்கம், தொண்டர்தம்பெருமை சொல்லவும் பெரிதே" யென்று கூறிப்போந்தனள் அல்லவா? பரம்பொருளின் பாதாரவிந்தத்தை அடைய ஆவல் கொண்டதிருநாவுக்கரசரும் தாம்வணங்கும்கடவுள் "அங்கமெலாங்குறைந்தழுகு தொழுநோயராயாவுரித்துத்தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர்நாம் வணங்கும் கடவுளாரே" என்று கூறியிருக்கின்றார் தானே. இதிலும்பார்க்கவும் சிவதொண்டனின் பெருமைக்கு வேறுசான்றும் வேண்டுமோமோ? இவைமட்டுமா உண்மைப்பக்தன் சுந்தரமூர்த்தியின் கேள்விப்படி அவரின்விவாகத்தினைத்தன்று அவரை உலகபாசங்களால் கட்டுண்ணுதபடி தடுத்தாட்கொண்டசரிதம், அரசன்தண்டனைக்கஞ்சி முறையிட்டவாசகருக்கு, நரிகளையெல்லாப் பரிகளாக்கி குதிரைக்காறன் வேடந்தாங்கிச் சென்று அவரைத்தண்டனைக்குள்ளாகாதபடி தடுத்தாட்கொண்டசரிதம், வைகைக்கரை அடைப்பான் வேண்டி சிவசிந்தனையில் ஆழ்ந்து கிடந்த அம்மையாரை அரசஆக்கினைக்குள்ளாகாதபடி தானே மாறன்கைப்பிரம்படி வாங்கி அம்மையாரைத்தடுத்தாட் கொண்டசரிதம், அருச்சுனன் கையால் வில்லடிபட்டசரிதம், கண்ணப்பநாயனாரால் மிதியடிக்காலால் உதைவேண்டியசரிதம், சாக்கியநாயனாரால் கல்லெறிபட்டசரிதம் இவையெல்லாம் அன்றும் இன்றும் எமக்குக்கழறுவதென்ன?

புராண இதிகாசங்கள், வேதங்கள் முதலிய வெல்லாம் எமக்கு இடித்திடித்து அறிவூட்டவும் நாம்அதை அலட்சியம் செய்துவிட்டு, பணம், அடலேறுவீரம், பட்டம் முதலியவற்றுல்வருஞ் அவப்பெருமையை எண்ணி அலைகின்றோமே. குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசியதையல்லவா ஒத்திருக்கின்றது இச்செய்கை. அந்தோ, உலக இந்திரியப் பொருட்களால்வரும் அவப்பெருமையை அடையாது அண்டபகிரண்டமும் அடங்க ஓர்நிறைவாகிய அந்தப்பரனே மனம்வாக்குக்காயமென்ற திரிகரணசுத்தியினுலும் வழிபட்டு வழிபட்டு அவனின் பாதமலர்களே அணைந்து "தப்பினேன், அவனுடன் இரண்டறக்கலக்கும் நிலையை அடைந்தேன்"எனநினைந்து இப்பெருமை அடையும் நாள் வந்தாளோ?

# சிவநேயர்களே கவனியுங்கள்!

'முத்து'

நம்முன்னோரால் மக்களின் சன்மார்க்க வளர்ச்சிக்காகவும் வாழ்க்கையின் லக்ஷ்யத்திற்காகவும் ஜனித்த ஆலயங்கள்பல நம் நாட்டில் உண்டு. இவ்வாலயங்கள் இப்போது எவ்வகையில் மக்களுக்குப் பயனளிக்கின்றனவென்பதைக் கவனிப்பின், அது, ஆலயங்களை அமைத்தோரின் நோக்கத்திற்கும் மக்களின்சன்மார்க்க நெறிக்கும் முற்றும் முரணுயிருப்பதையே நாம் காணலாம். இவ்வாறிருப்பதற்குக் காரணம் ஆலயங்களைப் பரிபாலிப்போரும், அர்ச்சகரென்ற நாமம் பூண்டபிராமணவர்க்கமும்- அறியாமையினலோ - சுயநலத்தாலோ-புனிதமான ஆலயங்களில் பலவித துர்க்கிருத்தியங்களுக்கும் இடமளிப்பது நிற்பதுமன்றி, மேலும் பொருள் வருவாயொன்றே, அதன் பெறுபேறெனக்கருதி அதற்கேற்ற வியாபாரமுறையில் ஆலயங்களை நடாத்திவருதலேயாம்.

நமது நாட்டிலே (யாழ்ப்பாணப்பகுதியிலே) உள்ள சைவாலயங்களிலே பங்குனிதொடக்கம் புரட்டாதியீறுகவுள்ள 8 மாசங்களிலும் திருவிழா, வேள்வி (ஆட்டுக்கடா அறுப்பதுட்பட) முதலியன நடப்பது வழக்கம். இக்காலங்களில் நமது சகோதரர்கள் இவ்விழாக்களின்பொருட்டுச் செலவிடும் பணம் கணக்கிடப்படுவதாயின்,கிட்டத்தட்ட 10லட்சம்ரூபாய்க்கு மேற்படும் என்று சொல்லலாம். இதனல் ஏற்படும் பலாபலனை 10லட்சத்துக்கு மேற்பட்ட துர்க்கிருத்தியங்களும், கொலை, களவு, கத்திக்குத்து. தடியடி முதலிய பஞ்சமாபாதகங்களுமேயாகும்.

சைவநீதி விளக்கமுறும்பொருட்டு அமைக்கப்பட்ட இச்சைவாலயங்கள் இவ்விதம் அநீதியானமுறையில் நடைபெறுவதனல், நமது நாடு தற்போது இருக்கும் கேவல நிலையிலும்பார்க்க, இன்னுமதிககேவலத்தை அடையுமென்பதை உணர்ச்சியுள்ள இந்துக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றைப்பொருட்படுத்தாது நாம் சும்மா இருப்போமானல் மற்றைய சமயத்தவராலும், மற்றைய நாட்டவராலும் இகழப்படுவதுமன்றி உண்மையானதருமத்தைக்கொன்று அதர்மம் என்னும் பேயைத்தலைவிரித்தாடத் துணைசெய்த பெரும்பழிக்கும் ஆளாவோமென்பதுதிண்ணம்.

இப்போது நமது யாழ்ப்பாண நாடு கொலை களவுமுதலிய பஞ்சமாபாதகங்கள் மலிந்த நாடெனப் பலரும் கூறத்தக்கதாக இருப்பதைப் பிற நாட்டில் வாழ்வோரும், பிறநாடுகளுக்குச் செல்வோரும் தாராளமாய் அறிந்திருப்பார்களென்றெண்ணுகின்றேன்.. இதன்காரணம் மக்களில் மிகுதி நிலைபால் ஏற்பட்டுள்ள மாறுதலேயென்பது எவராலும் மறுக்கமுடியாத ஓர் உண்மையாகும்.

சைவக்கனவான்களே! நன்மக்களே!! எழுமின்! விழிமின்!! நம் நாட்டின் சுபாவியாதைகையும். சன்மார்க்க வாழ்வையும் பாதுகாக்க இன்றே முன்னணிக்குவாருங்கள்! எல்லாவற்றிற்கும் முதலாவதாகச் செய்யப்படவேண்டிய தொண்டு சமயத்தொண்டேயாகும். சமய வாழ்க்கையிலீடுபட்டாத எவரும் நல்வாழ்க்கையை ஓம்பமாட்டார்களென்பதை உணருங்கள்!

ஆகையால் முதலாவதாக இந்துக்கள் யாவரையுங்கொண்ட ஒரு ஆலய பரிபாலனசபையொன்று நிறுவப்படல் வேண்டும். ஆலயங்கள் நடத்தப்படவேண்டிய ஒழுங்குமுறைகள் வகுக்கப்படல்வேண்டும். ஆலய தருமகர்த்தாக்கள் (மனேஜர்கள்) பொதுசனங்களாற் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ஆலயங்களில் பூசை செய்பவர்களோ, மற்றும் சமயசம்பந்தமானகிரியை செய்பவர்களோ குறித்த ஓரளவுகல்வியும் (ஆங்கிலம் படிக்கவேண்டிவந்துவிடும் என்றுபயப்படவேண்டாம்), ஒழுக்கமும் தகுதியுமுடையவர்களாயிருக்கவேண்டும். ஆலயங்களில்வரும் வருவாயை(தெட்சணைக்காசுஉட்பட) க்கொண்டு ஆலயங்தோறும் சமயசம்பந்தமான நூல் நிலையங்கள் அமைத்தலும் சற்பிரசங்கங்கள் செய்வித்தலும் வேண்டும். சைவசமயத்தின்பேரால் ஆடு, மாடு, கோழியை வெட்டிப்பலியிடும் அநியாயவழக்கமும், தாசிகள் நடனம், வானவேடிக்கை, முதலிய கேட்டசெயல்களும் ஒழிதல்வேண்டும். ஆலயங்களில் சைவர்களாயுள்ள எவர்களும் சமஉரிமையுடையவர்களாக இருக்கவேண்டும். தெருக்கள், ஒழுங்கை

# ஜாவாவிலுள்ள ஒருசின்கோனை தோட்டத்தை கண்ட விபரம்.

சுகாதாரப்பகுதி உதவித்தலைவர் டாக்டர் எஸ். எல். செல்லப்பா O. B. E. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது

(அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதிவெளியீடு)

(மூற்றொடர்ச்சி.)

## சின்கோனைமரத்தில் இருசாதிகளுண்டு.

முதற்சாதிச் சின்கோனைமரம் நோய்களை எதிர்த்தும் எத்தரையிலும்வளரும். இதன்பட்டையில் 100ல் 2½ அல்லது 3பங்குதான் குயினையின்எடுக்கலாம் 'வேர்மத' "ஓஃருயினையின்" போன்றவைகள் இதிலிருந்து எடுக்கப்படும். உலகத்தின் பெரியகுயினையின் சாலை பன்டோங்கிற்தான் உளது என்று கருதுகிறோம் அங்கே சின்கோனைப்பட்டையை உரித்துப்பல்வேறு வித்தியாசமானரூபங்களாய்த் துண்டஞ்செய்கிறார்கள். இச்சாதிமரத்தின் இலைகளும் மற்றச் சாதிமரத்தவைகளிலும்பார்க்கப் பெரியதாயிருக்கும்.

இரண்டாஞ்சாதி மரம் முதற்சாதிமரத்தைப்போன்று பூச்சிகளை எதிர்க்கும் சக்திகொண்டதல்ல, இலைகள் சிறியவையாயிருக்கும். குயினையின் 100ல் 10அல்லது 15பங்கு எடுக்கலாமென்றாலும் இம்மரத்தைவளர்ப்பது மிகச்சிரமம். நல்ல தரையும்வேண்டும், வேரைப்பற்றியநோய்களை எதிர்க்குஞ் சக்தியுங்குறைவு.

## மரம் ஒட்டவைத்தல்.

ஒருசாதிமரத்தின் நல்ல அம்சங்களை மாத்திரம் பெறுவதற்காக இரண்டாஞ்சாதி மரத்துக்கொம்பை முதற்சாதிமரத்து அடிமரத்தில் ஒட்டவைப்பதுண்டு. சரியானகிலியில் ஒட்டுமரத்தைவைத்து ஒருவகைமெழுகைத்தடவுவார்கள். இப்படியொட்டுவதால் முதற்சாதிமரத்து வேர்களையும் இரண்டாஞ் சாதிமரத்துக் கொம்புகளையுங்கொண்ட ஒருமரம் உண்டாகிறது. இரண்டாஞ்சாதி மரத்து இலைகளிலும்பார்க்க இதன்இலைகள் சிறியவையாயிருக்கும்.

தொடக்கத்தில் மூன்றடிகளுக்கப்பால் இம்மரங்களைநாட்டப்படும். இதன்பின் ஆறடிதுவக்கம் எட்டடிவரையும் இவ்விடப்பட்டு இடையிலுள்ள மரங்களைப்பிடுங்கிவிடுவார்கள். இப்படிப்பிடுங்கப்பட்ட மரங்களின் பட்டைகளிலிருந்து, குயினையின் எடுக்கப்படும்.

எட்டிலிருந்து பத்தாண்டுகள்வரையில் இப்பட்டைகளில் எடுக்கக்கூடியளவு குயினையின் இருக்கும். முரத்திற்குவயசு ஏற ஏற அடிமரம் பெருத்துப்பட்டையும் தடிப்பாகும். ஆகையால் குயினையின் ஒவ்வொருவருக்கரிலுங்காலஞ்சென்றால் அதிகமாய்க்கிடைக்கும்.

## குயினையின் எடுக்கும்வகை.

குயினையின் எடுக்கவேண்டியிருந்தால், மரங்களை வேரோடு பிடுங்கி மரப்பட்டையையும், வேர்ப்பட்டையையும் உரிப்பார்கள். முதற்சாதிமரமானால் அடிமரத்தை இரண்டாய்க்கிளித்துப் பட்டைகத்தியாற்

---

கள், பணங்காணிகள்மீதாறும் வருவாயின் பொருட்டுச் சூலம்காட்டுதலும், உண்டியற் பெட்டிவைத்து அதில் ஒன்றுமறியாத பாமர சனங்கள் போடும் பணத்தைக்கொண்டு வயிறுவளர்ப்போரும், சமயத்தின்பேரால் காவி வஸ்திரம், உருத்திராக்கமாலை, விபூதிகளால்வேஷம் போட்டுக்கொண்டும், மடம், ஆலயம் கட்டுவதற்காகப் பணம் திரட்டும் சோம்பேறிகளும் முற்றாய் ஒழிதல் வேண்டும்.

இதைவாசிக்கும் ஒவ்வொரு சைவ அன்பர்களும் முன்வந்து ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்யுங்கள். நாளைபார்ப்போம் என்றிருந்தீர்களோ எமதுபிற்கால இளைஞர்களின் சன்மார்க்க வாழ்வைச்சீர்குலைத்த பழி உங்கள் மேலேவந்து சேரும்.

## பிரம்மதரிசனம்

(2ம் பக்கத்தொடர்ச்சி.)

அப்போது நாம் பரம்பொருளைமறந்து நம்முடைய சுயபலத்தாலேயே வைராக்கியத்தையடைந்ததாக எண்ணி இறுமாப்படைகிறோம். மனிதனுக்குள்ளிருக்கும் ஜீவாத்மாவே இந்திரன். ஏதோசிலசமயங்களில் நமக்குப் பரம்பொருளின் தரிசனம் தோன்றிமறையும் மின்னலைப்போலக்கிட்டுகிறது. பரம்பொருளின் பரந்ததன்மையை நாம் ஒருவாறு உணருகிறோம். உடனே நம்முடைய பேச்சுக்குக்காரணமான 'அக்னி' அப்பரம்பொருளைவிவரித்துக் கூறமுற்படுகிறார் அம்முயற்சிவீணாகின்றது. மனமும் வார்த்தையும்சொல்லமுடியாதநிலையல்லவாபரம்பொருளின்நிலை? பிறகு நம்முள்ளிருக்கும்பிராணனுகியவாயுபகவான்தான் பரம்பொருளைஅறிந்து விடுவதாகக் கர்வத்துடன் முயலுகின்றார். அவரும் வெற்றியுறுவதில்லை. பிறகு ஜீவாத்மாவாகிய இந்திரனை அம்முயற்சியில் ஈடுபடும்பொழுது பரம்பொருள்திடீரென்று மறைந்துவிடுகின்றார். பிரமித்து நிற்கும் ஜீவாத்மாவுக்கு வித்தியாசக்தியான உமாதேவிபரம்பொருளினுடைய இயற்கையை நன்குதெளிவுக்குகிறாள். அவளுடைய அருளைப்பெற்று ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றுகிறான். தனியாகத்தோன்றிய பரம்பொருளாகவே தானும் ஆகிவிடுகின்றான். —:இராமகிருஷ்ணவிஜயம்

கிறி யெடுக்கப்படும். இரண்டாஞ்சாதிமரத்தைப் பல துண்டுகளாய்வெட்டி மரச்சுத்தியால் அடித்து பட்டைளடுக்கப்படும். பட்டையின்மேல் பொதுவாய்ப்பாசி படர்ந்திருக்கும், எவ்வளவுக்கெவ்வளவு பாசிபடர்ந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு குயினையின், அதிகமாய்க்கிடைக்கும். மரத்தின்பட்டைகளை வெளியிற் காயவைத்து அத்துடேசூடாக்கின காற்றைச்செலுத்துவார்கள், நன்றுய்க்காய்ந்தபின் வெளியிலெடுப்பார்கள். இத்தருணத்தில் இலகுவாய்த்தூளாகும். இப்படிக்காய்ந்த பட்டையை ஒருயந்திரத்தின் மூலம் தூளாக்குவார்கள். இத்தூளைக்குயினையின் சாலைகளுக்கு அனுப்பியபின் அங்கே அது சுத்தமாக்கப்படும்.

சுத்தமாக்கப்பட்டதூளைப் பன்டோங்கிற் கனுப்பும்போது அதுசாக்குகளிற் போட்டுத்தைக்கப்படும். ஆனால் அதை ஐரோப்பாவிற்கு அனுப்புகில் ஒவ்வொரு மூட்டையையும் 90-100 கிலோகிரும் நிறையாய் இறுக்க மாய்க்கட்டப்படும். கப்பற்கேள்வு பருமனுக்குத் தக்கபடியேயாதலால் அதைக்குறைப்பதற்காகவே இப்படிச்செய்யப்படுகிறது. கப்பற்கேள்வுநிறையின்படியல்ல.

மரங்களின் வளர்ச்சியை நிலம் எவ்வளவு பாதிக்கிறதென்பதை வேர்களைக்கவனிப்பதால் விளங்கும். நிலம் நன்றுயிருந்தால் மரம் தடிப்புள்ளதாயும் அனேக வேர்களையுடையதாயுமிருக்கும். ஆகையாற் குயினையினும் அதிகமாய்க்கிடைக்கும். நிலம் கூடாததனால் வேர்களும் குறைவாயிருப்பதோடு மரமும் மெலிந்திருக்கும், ஆகையால் அதிகம் குயினையின்எடுக்கமுடியாது.

## காட்சி சாலை.

குயினையின்மரத்தைப்பற்றிய சகலவிஷயங்களையுங்காட்டும் காட்சிசாலையொன்று அத்தோட்டக்காட்டில் உண்டு, அங்கு அம்மரத்தையும் இலைகளையும்தின்னும் பூச்சிகளைக்காணலாம். ஒருசாதி வண்ணத்திப் பூச்சி இலைகளையும் புசிக்கின்றன. மரத்தைப்புசிக்கும் பூச்சி நேரேமரத்திடம் போவதில்லை. அப்படிச்செய்தால் பட்டைக்குச்சேதமேற்படாது. ஆனால் அதுமரத்தைச்சுற்றித்தின்று பட்டையைச் சேதப்படுத்திவிடுகிறது.

பூச்சிகளை அழிப்பதற்கும் மரங்களிலிருந்து கூடியபங்கு குயினையின் எடுப்பதற்காகவும் ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன. இவ்வாராய்ச்சிகளிலொன்று வருடாந்தம் இரண்டாஞ் சாதிமரத்திலிருந்து எடுக்கப்பட்ட குயினையினைக்காட்டியது. அச்சாதிமரம் 17வருஷத்தில் கூடியபங்கு பயனளித்தது. இரண்டாஞ்சாதிமரத்தில் ஒருவகையிலிருந்து கூடியபங்கு மருந்து 11ம் வருஷத்திற்கிடைத்தது.

## சின்கோனுமரங்களைப்பயிர் செய்தல்.

குடியேற்றநாடுகளில் சின்கோனுப்பயிர்செய்வதை விருத்திசெய்வதைப்பற்றி மேற்கூறிய கிளைச்சபையார் கூறுவதாவது "ஒல்லாந்த இந்தியதீவுகளுடன் போட்டிபோடும் நோக்கத்துடன் இரண்டாஞ்சாதி சின்கோனுமரங்களைப்பயிர்செய்வதைப்பற்றிக் குடியேற்றநாட்டு அரசாங்கத்தார்கள் சிந்திக்கவேண்டியதில்லை. அந்தந்த ஊரில் எந்தெந்தச் சின்கோனு வகைகளுருய்விருத்தியடைகிறதோ அதையேபயிர் செய்யவேண்டும். மலேரியாவைக்கையாளுவதற்கு குயினையிலே சிறந்தமருந்து, அதுஇலகுவாய் உண்டாக்கலாம், விலையுஞ்சகாயமானது, நாட்டுப்புறச்சனங்களுக்கு ஏற்றமருந்தும் இதுவே"

மேற்படியறிக்கை இன்னுங் கூறுவதாவது "தாகுதல் சின்கோனுச்சாதிகளை விஸ்தாரமாய்ப் பயிர்செய்ய ஏற்பாடுசெய்முன் (1) பயிர்செய்யக்கூடிய நிலங்களின்தன்மையையும் (2) பயிர் செய்வதில் செலவாகும்பணத்தையும் 3 செய்யப்படும்மருந்தைத் தேசமுழுதும்பரப்புவதற்கு வேண்டிய வேலைபாட்களும் மற்றும் வசதிகளைப் பற்றிப் போதியளவு ஆராய்ந்தபின்பே இம்முயற்சியிலீடுபட வேண்டுமென்பது. இலங்கைக்கு வேண்டியகுயினையினை இங்கேயே உற்பத்திசெய்வதென்றால் மேற்கூறிய முதலாவதும் இரண்டாவது விஷயங்களைப்பற்றிய முழுப்புள்ளிவிபரங்களை எடுக்கவேண்டும். மூன்றுவது விஷயத்தைப்பற்றிய வசதிகள்தற்போதிருக்கின்றன.


## பத்திரிகைக் கிரயம்.

தனிப்பிரதி.....5 சதம்
வருடசந்தாதபாற்செலவில்லாமல்...50 ,,
,, தபாற்செலவுட்பட.....75 ,,
,, மலாய்நாட்டுக்கு.....ரூ 1-00

சந்தாவைத் தயவுசெய்து இரண்டுசதமுத்திரைகளாயேனும் பருத்தித்துறை, சைவப்பிரகாச சபை நிதித்தலைவருக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம். (ப-ர்)

Printed at the Saiva Pothini Press, Pt. Pedro and published by the Pt. Pedro Saivaprakasa Sabai